IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2023

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ரமேஷ் |
| FATHER NAME | - | திரு,கோவிந்தன் |
| VILLAGE | - | சத்துவாச்சாரி, வேலூர் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | டிரைவர் |
| AGE | - | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2025.

எதிரிகள் 2 முதல் 6 ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை –</u>

நான் சத்துவாச்சாரி, விஜயராகபுரத்தில் குடியிருக்கிறேன். புகார்தாரர் கோவிந்தன் எனது அப்பா. ஆண்டாள் எனது அம்மா. எனது அப்பா 2 வருடத்திற்கு முன்பு உடல் நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். 20.04.2019 அன்று மாலை 8.15 மணிக்கு நான் வீட்டிலிருந்து பால்பண்ணை ரோட்டிற்கு வந்தேன். அப்போது அங்கு கூட்டமாக இருந்தார்கள். நான் போய் பார்த்த போது எனது அண்ணன் செல்வராஜ் வெட்டுக்காயம் பட்டு இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். நான் எனது , அம்மா அப்பாவிற்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர்கள் வந்தார்கள். நாங்கள் விசாரித்தோம் அதற்கு என் அண்ணன் செல்வராஜ் யுவராஜ் தன்னை கத்தியால் வெட்டியதாக சொன்னார். கொஞ்ச நேரத்திலேயே எனது அண்ணன் இறந்துவிட்டார். ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு

கொண்டு சென்றோம். எனது அப்பா கோவிந்தன் இது சம்பந்தமாக புகார் கொடுத்தார். சம்பவத்திற்கு 2 நாள் முன்பாக பிரபு, யுவராஜ், கணேசன் வீட்டிற்கு வந்து என்னிடம் என் செல்வராஜ்ஜை ஒழுங்காக இருக்க சொல் இல்லை என்றால் அவன் சாவு எங்கள் கையில் தான் என்று சொன்னார்கள். சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பாக பால்பண்ணைக்கு எதிரே உள்ள பொன்முடி கோழிக் கடையில் வைத்து நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள டிசர்ட் அணிந்துளள யுவராஜ், மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 4 எதிரிகளும் செல்வராஜ் அடிக்கடி பிரச்சனை செய்கிறான் அதனால் செல்வராஜ்ஜை போட்டு தள்ள வேண்டும் என்று பேசியதை நான் கேட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை– எதிரிகள் தரப்பு</u>

பொன்முடி கோழிக் கடையில் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 2 முதல் 5 எதிரிகள் எனது அண்ணன் செல்வராஜ்ஜை போட்டு தள்ள வேண்டும் என்று பேசியதை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது அண்ணன் செல்வராஜ் மிது நிறைய வழக்குகள் உள்ளது. எனது அணணனுக்கு பல எதிரிகளும் உண்டு. சம்பவ இடத்திற்கு நாங்கள் வந்த சிறிது நேரத்திலேயே ஆம்புலன்ஸ் வந்தது. போலீசார் அப்போது அங்கே 2,3 பேர் இருந்தார்கள். போலீசார் அங்கிருந்த எங்களை யார் என்று விசாரித்தார்கள். மருத்துவமனைக்கு நாங்கள் போனோம். போலீசார் என் அப்பாவிடம் புகார் வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. என் அண்ணனுக்கு பல எதிரிகள் உண்டு என்றும் யாரோ என்

அண்ணனை கொலை செய்து விட்டார்கள் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி முதல் விசாரணையில் டிசர்ட் அணிந்துள்ள எதிரி யுவராஜ் என அடையாளம் காண்பித்தார். ஆனால் 1வது எதிரி யுவராஜ் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமல் கு.வி.மு.ச 317 மனு ஏற்பு சாட்சி அடையாளம் காண்பித்த யுவராஜ் என்று அடையாளம் காண்பித்தார் எதிரி பெயர் கிரிதரன். எனது அண்ணனை போட்டு தள்ள வேண்மும் என 5 எதிரகிள் 1வது எதிரியை தவிர பொன்முடி கோழிக் கடையில் திட்டம் தீட்டியது சம்பந்தமாக அப்போது போலீஸில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு 3 நாள் முன்னர் நீதிமன்றத்தில் உள்ள 2 முதல் 4 எதிரிகள் வரை என்னையும், என் அப்பாவையும் என் அண்ணனை ஒழுங்காக இருக்க சொல் இல்லை என்றால் தீர்த்துகட்டி விடுவோம் என்று மிரட்டி விட்டு சென்றதற்கு நானும் எனது அப்பாவும் அப்போது போலீஸில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. பொன்முடி கோழிக்கடையில் இருந்து சத்துவாச்சாரி காவல் நிலையம் 1 கி.மீ. தூரம் என்றால் சரி. 10 நிமிடத்தில் காவல் நிலையம் சென்று விட முடியும் என்றால் சரி. எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் எதிரிகள் மீது பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் மறுக்கிறேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 06.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

6.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**